1973 ஆகஸ்ட் 14]

ஆயிரம் ரூபாய் காம்பன்சேஷன் தரப்படுகிறது, பேருந்துகளில் செல்லும் பொழுது இறந்துவிட்டால் குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாயாவது கொடுக்கக்கூடிய அளவிற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்கு எல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. ஒருவேளை, விமானத்திலே, ரயிலிலே செல்கின்றவர்கள் அந்தஸ்திலே உள்ளவர்கள் என்ற காரணத்தினால் அவ்வளவு தொகையை அளிக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் விபத்திலே உயிரிழந்தவர்களுக்குக் கூடுமான வரையில் சட்ட விதிகளின்படி எந்த அளவிற்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : விபத்துக்களில் இறந்தவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் இலாகாவே ஒரு நஷ்ட ஈடு தொகையைக் கொடுக்கிறதா அல்லது ஆக்ஸிடெண்ட் கிளெய்ம்ஸ் ட்ரிப்யூனல் மூலமாக வழக்காடி அவர்கள் இவ்வளவு பணம் கொடு என்று உத்திரவிட்டதற்குப் பிறகு கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு முறைகளும் கையாளப்படுகின்றன.

மாப்படுகை—கோடங்குடி பேருந்து வழித்தடம்

*148 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன்கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: